ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1805 - 2013 අප්‍රේල් මස 05 වැනි සිකුරාදා - 2013.04.05
*1805 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 973 |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 970 | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 970 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


***கவனிக்க.-*** *(i) ஸ்ரீலங்கா ஹிரா பௌன்டேஷன் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, திசெம்பர் மாதம் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

*(ii) பி. ஹரிசன் சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

*(iii) இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

## வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2013, ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# மற்றைய நியமனங்களும் பிறவும்

**ஊவா மாகாண மாகாண சபை**

*2001 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஊவா மாகாண பிரயாணிகள் போக்குவரத்துச் சேவை சபை தொடர்பான கொள்கைத் திட்டத்தின் 20 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 7(அ) ஆம் பந்தியின்கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் ஒரு வருட காலத்திற்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பதை இங்கு அறியத்தருகின்றேன்.*

சஷீந்திர ராஜபக்ஷ,
முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும்,
கல்வி, உள்ளூராட்சி, கலாச்சார அலுவல்கள், போக்குவரத்து,
காணி, நீர்ப்பாசனம், பொருளாதார மேம்பாடு, கிராமிய
உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர்,
ஊவா மாகாண மாகாண சபை.

ஊவா மாகாண மாகாண சபை,
பதுளை,
2012, செத்தெம்பர் 08.

**கட்டளை**

ஊவா மாகாண பிரயாணிகள் போக்குவரத்துச் சேவை சபையின் தலைவராக கீழ் பெயர் குறிப்பிடப்பட்ட அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை இங்கு அறியத்தருகின்றேன் :-

திரு. டபிள்யூ. எம். அத்தனாயக்க, பிரதி பிரதம செயலாளர் (நிதி), பிரதி பிரதம செயலாளர் அலுவலகம், ஊவா மாகாண சபை, பதுளை

4-270

---

# மாகாண சபை அறிவித்தல்கள்

**வடமேல் மாகாண மாகாண சபை**

*1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொதுச் சவச்சாலையும் தனியார் சவச்சாலையும் பற்றிய கட்டளைச் சட்டத்தின் 11 ஆம் பந்தியின் 5(1) இன் கீழ் இடப்படுகின்ற அறிவித்தல்*

*1989 இலக்கம் 12 ஆகிய மாகாண சபை (முறைப்படியான சட்டதிட்டம்) விதியின் 02 ஆம் பிரிவின் 11 ஆம் உபபிரிவின் (அ) பந்தியுடன் சொல்லப்படுகின்ற 1946 இலக்கம் 57 ஆகிய பொதுசவச்சாலையும் தனியார் சவச்சாலையும் பற்றிய கட்டளைச்சட்டத்தின் 11ஆம் பந்தியின் 5(1) விதியின் மாகாணசபையின் உள்ளூராட்சிக்குப் பொறுப்பான அமைச்சருக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின்படி வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் முதலமைச்சரும் உள்ளூராட்சிக்குப் பொறுப்பானஅமைச்சருமான அதுல சரத் குமார விஜேசிங்க ஆகிய என்னால் வடமேல் மாகாணத்தின் குருணாகல் மாவட்டத்தின் பன்னல பிரதேச சபை எல்லைக்குள் அமைக்கப்பட்டிருக்கும் பின்வரும் உப பிரிவில் குறிப்பிடப்பட்ட அடக்கம் செய்யப்படும் சவம் புதைத்தல் அல்லது தகனம் செய்தலுக்கான பொது சவச்சாலையாக இங்கு அறிவித்தல் செய்யப்படுகின்றது.*

(சட்டத்தரணி) அதுல சரத் குமார விஜேசிங்க,
முதலமைச்சரும் உள்ளூராட்சிக்கும் பொறுப்பான அமைச்சரும்
வடமேல் மாகாண சபை.

முதல் அமைச்சர் அலுவலகம்,
குருநாகல்,
2012, நவெம்பர் 30.

**அட்டவணை**

**1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொதுவானதும் தனிப்பட்டதுமான சவச்சாலை பற்றிய கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பந்தியின் 5(1) விதிப்படி படபொத எல சவச்சாலை விதிக்கப்படல்**

பன்னல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கடுகம்பல எனும் பெயரில் அ.க.பி.390 (54) அம்பலபிடிய ஹேன எனும் பெயருடைய நிலத்தின் துண்டு இலக்கம் 54.

உபபிரிவு :

| | |
|---|---|
| நிலம் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு | : பன்னல |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : படபொத எல |
| பெயர் | : படபொத எல |
| நிலத்தின் பெயர் | : அம்பலபிடியஹேன |

எல்லை :-

வடக்கிற்கு : இலக்கம் 15 நிலப் பிரிவு
கிழக்கிற்கு : இலக்கம் 49 நிலப் பிரிவு
தெற்கிற்கு : இலக்கம் 50.51, 52, 53 நிலப் பிரிவு
மேந்கிற்கு : இலக்கம் 19 ஏ, நிலப் பிரிவு

1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொதுவானதும் தனிப்பட்டதுமான சவச்சாலை பற்றிய கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பந்தியின் 5(1) விதிப்படி வெல்லேவ சவச்சாலை விதிக்கப்படல்.

பன்னல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கடுகம்பல எனும் பெயரில் அ.க.பி. 377 (25சீ) போகஹகெலே எனும் பெயருடைய நிலத்தின் துண்டு இலக்கம் 25 சீ

உபபிரிவு :

| | |
|---|---|
| நிலம் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு | : பன்னல |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : வெல்லேவ |
| பெயர் | : வெல்லேவ |
| நிலத்தின் பெயர் | : போகஹகெலே |

எல்லை :-

வடக்கிற்கு : இலக்கம் 25 நிலப்பிரிவு 297962 ஆகிய உரிமையாளர் நிலம்
கிழக்கிற்கு : 292962, 292968, 292963 ஆகிய வரைபடங்களின் நிலம்
தெற்கிற்கு : 292963, 292964, படங்களின் நிலம்
மேற்கிற்கு :292964 படத்தின் நிலமும் இல. 25 நிலப் பிரிவு

1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொதுவானதும் தனிப்பட்டதுமான சவச்சாலை பற்றிய கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பந்தியின் 5(1) விதிப்படி பஹலகடுகம்பல சவச்சாலை விதிக்கப்படல்

பன்னல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பஹலகடுகம்பல எனும் பெயரில் அ. க. பி. 394 (12) பெம்ம எனும் பெயருடைய துண்டு இலக்கம் 25 சீ

உப பிரிவு:-

| | |
|---|---|
| நிலம் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு | : பன்னல |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : நமனாகொட |
| பெயர் | : கடுகம்பல |
| நிலத்தின் பெயர் | : பெம்ம |

எல்லை :-

வடக்கிற்கு : நமனாகொட ஊர் எல்லை துண்டு இல. 2 ஓ
கிழக்கிற்கு : துண்டு இலக்கம 2 டீ 2 ஆர்
தெற்கிற்கு : துண்டு இலக்கம் 2 ஆர், நமனாகொட ஊர் எல்லை
மேற்கிற்கு : நமனாகொட ஊர் எல்லை

1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொதுவானதும் தனிப்பட்டதுமான சவச்சாலை பற்றிய கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பந்தியின் 5(1) விதிப்படி மதவ சவச்சாலை விதிக்கப்படல்.

*பன்னல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மதவ எனும் பெயரில் அ.க.பி. 395 (1) ரன்மல் காவ வத்த எனும் பெயருடைய நிலத்தின் துண்டு இலக்கம் 1*

*உப பிரிவு:-*

*நிலம் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு : பன்னல*
*கிராம உத்தியோகத்தர் பிரிவு : வன்னேகெதர*
*பெயர் : மதவ*
*நிலத்தின் பெயர் : ரன்மல்கவ்வத்த*

*எல்லை :-*

*வடக்கிற்கு : கல்கொமுமுல்ல ஊர் எல்லை*
*கிழக்கிற்கு : டீ.பீ. 292465*
*தெற்கிற்கு : டீ.பீ. 292465 உம் டீ.பீ .292457*
*மேற்கிற்கு : பாதை*

*1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொதுவானதும் தனிப்பட்டதுமான சவச்சாலை பற்றிய கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பந்தியின் 5(1) விதிப்படி ஹமன்கல்ல சவச்சாலை விதிக்கப்படல்*

*பன்னல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஹமன்கல்ல எனும் பெயரில் அ.க.பி. 388 (86) திப்பொல ஹேன எனும் பெயருடைய நிலத்தின் துண்டு இலக்கம் 86*

*உப பிரிவு:-*

*நிலம் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு : பன்னல*
*கிராம உத்தியோகத்தர் பிரிவு : ஹமன்கல்ல*
*பெயர் : ஹமன்கல்ல*
*நிலத்தின் பெயர் : திப்பொலஹேன*

*எல்லை :-*

*வடக்கிற்கு : இலக்கம் 84 நிலப்பிரிவு*
*கிழக்கிற்கு : இலக்கம் 78 உம் 27 நிலப்பிரிவு*
*தெற்கிற்கு : இலக்கம் 27 ஏ உம் 88 நிலப்பிரிவு மாவத்த 87 நிலப்பிரிவு*
*மேற்கிற்கு : இலக்கம் 87, 56, 76, 85 நிலப்பிரிவு*

*1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொதுவானதும் தனிப்பட்டதுமான சவச்சாலை பற்றிய கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பந்தியின் 5(1) விதிப்படி கெகில்லபிடிய சவச்சாலை விதிக்கப்படல்*

*பன்னல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கெகில்லபிடிய எனும் பெயரில் அ.க.பி. 352 (38) வவுல்கெலே எனும் பெயருடைய நிலத்தின் துண்டு இலக்கம் 38*

*உப பிரிவு:-*

*நிலம் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு : பன்னல*
*கிராம உத்தியோகத்தர் பிரிவு : கெகில்லபிடிய*
*பெயர் : கெகில்லபிடிய*
*நிலத்தின் பெயர் : வவுல்கெலே*

*எல்லை :-*

*வடக்கிற்கு :*
*கிழக்கிற்கு :*
*தெற்கிற்கு : இலக்கம் 39 ஆகிய நிலப்பிரிவு*
*மேற்கிற்கு : இலக்கம் 37 ஆகிய நிலப்பிரிவு*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## மாகாண கமத்தொழில் திணைக்களம் - மேல் மாகாணம்

*ஹோமாகம (ஆண்), வல்பிட்ட (பெண்) ஆகிய இடங்களிலுள்ள மாவட்டக் கமத்தொழிற் பயிற்சி நிலையங்களில் நடாத்தப்படவுள்ள உத்தேச ஓராண்டு கமத்தொழில் பயிற்சிநெறி – 2013/2014*

மேற்படி பயிற்சி நெறிக்காக மாணவ, மாணவிகளைச் சேர்த்துக்கொள்வதற்காக மேல் மாகாண, மாகாண கமத்தொழில் பணிப்பாளர் விண்ணப்பங்களைக் கோருகின்றார். இப்பயிற்சி நெறி சிங்களத்தில் நடாத்தப்படும். கமத்தொழிலை ஒரு தொழிலாகக் கொள்ள விரும்புபவர்களுக்கும் சுயமாகக் கமத்தொழிலில் ஈடுபட விரும்புபவர்களுக்கும் இப்பயிற்சி நெறி பெரிதும் உதவியாக இருக்கும்.

2. செயன்முறை மற்றும் கோட்பாடு பயிற்சி என நடாத்தப்படும் இப்பயிற்சிநெறியை வெற்றிகரமாக முடித்துக்கொள்பவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படும். இப் பயிற்சிநெறிக்கான பாடங்கள் பின்வருமாறு :-

(i) கமத்தொழில் விவசாயமும், தொழிற்துறை வழிகாட்டியும் ;
(ii) விவசாய கொள்கையும், அபிவிருத்தி செயன்முறையும் ;
(iii) விவசாய பயிர்நடுகை தொழில்நுட்பம் ;
(iv) விலங்கு வேளாண்மை முகாமைத்துவம் ;
(v) விவசாய எந்திரவியல் நுணுக்கங்கள் ;
(vi) குடும்பப் பொருளாதாரமும் உணவு தொழிநுட்பமும்.

மேற்படி பாடங்கள் வாயிலாக இப் பயிற்சிநெறியைக் கற்பிக்கும்போது, (அறுவடையின் பின் தொழில்நுட்பவியல், மென்சவ்வு வளர்ப்புத் தொழில்நுட்பவியல், பயிரிடலில் 'பச்சையம்' முறைகள் போன்ற நவீன கமத்தொழில் தொழில்நுட்பவியல் அபிவிருத்தி தொடர்பான மிக புதிய கண்டுபிடிப்புகள் பற்றியும் (நில வடிவமைப்பு, அலங்கார மீன் வளர்ப்பு, பண்ணைக் கணக்குகள், பண்ணை உபகரணப் பராமரிப்பு, உழவு இயந்திரம் ஓட்டப் பழகுதல் போன்ற) சுய வேலைவாய்ப்பு தொழில்நுட்பங்களிலும் பரிச்சயம் ஊட்டப்படுவதோடு (கணனிகளை இயக்குதல் போன்ற) நவீன தகவல் தொழில்நுட்ப முறைகளிலும், மாணவ-மாணவிகளுக்கும் பயிற்சி அளிக்கப்படும். கிராமப்புற மாணவ மாணவியர்க்கு ஆங்கில அறிவு ஊட்டப்படுவதோடு சம கால கமத்தொழிற் கொள்கை பற்றியும் விளக்கம் அளிக்கப்படும்.

3. **பயிற்சிநெறிகளை நடாத்துதல்.**- இப்பயிற்சி நெறி மூன்று தவணைகளைக் கொண்ட ஒரு வருட காலப்பகுதிக்கானதாகும். முதலாம் இரண்டாம் தவணைகளின் முடிவில் எல்லாப் பாடங்களிலும் எழுத்திலான மற்றும் செயன்முறைப் பரீட்சைகள் நடாத்தப்படும். கல்விச் சுற்றுலாக்கள் இரண்டாம் தவணையில் நடாத்தப்படும். மூன்றாம் தவணையின்போது வெளிவாரி கமத்தொழில் கருத்திட்டம்/நிறுவனம் தொடர்பாகத் தெரிவு செய்யப்பட்ட துறையில் கருத்திட்ட ஆய்வை மேற்கொள்ளுமாறு சகல மாணவ-மாணவிகளும் தேவைப்படுத்தப்படுவர். ஆய்வின் முடிவில் மாணவ மாணவிகள் கட்டுரை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர். அதன் முடிவில் இறுதி எழுத்திலான மற்றும் செயன்முறைப் பரீட்சை நடாத்தப்படும். தொடர் மதிப்பீட்டில் சித்திபெற்று 85% வரவைக் காட்டும் மாணவ-மாணவிகளுக்குப் பயிற்சிநெறியின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

4. **ஆட்சேர்ப்புச் செய்யும் விதம்** :

4.1 *கல்வித் தகைமைகள் :*

(i) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம் (மொழி மற்றும் இலக்கியம்), கணிதம், விஞ்ஞானம், சமூகக் கல்வி, (கமத்தொழில், தையல் வேலை, வீட்டுத் தோட்டம், வீட்டுப் பொருளாதாரம், கணக்கியல் மற்றும் வர்த்தகம், மோட்டார் பொறிமுறை) தொழில்நுட்பப் பாடம் உட்பட ஆறு பாடங்களில் இரண்டு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

4.2 *ஏனைய தகைமைகள் :*

(i) விண்ணப்பதாரர்கள் அனைவரும் விண்ணப்பம் கோரும் திகதியன்று 17 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருக்க வேண்டும்;

(ii) விண்ணப்பதாரர்கள் திருமணம் முடிக்காதவர்களாக இருக்க வேண்டும்;

(iii) விண்ணப்பதாரர்கள் செயன்முறைக் கமத்தொழிலில் ஈடுபடுவதற்கேற்ற தேகாரோக்கியமுடையவர்களாக இருக்க வேண்டும். (இதனை நிரூபிக்குமுகமாக பயிற்சி நெறியின் ஆரம்பத்தில் அரசாங்க மருத்துவ அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட மருத்துவச் சான்றிதழொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்);

(iv) தகுதியுடைய பரீட்சார்த்திகள் மாகாணக் கமத்தொழில் பணிப்பாளரினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுமாறு அழைக்கப்படுவர். இப்பரீட்சையின் பெறுபேற்று அடிப்படையிலேயே தெரிவு செய்யப்படுவர்;

(v) கமத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் அதனை வாழ்க்கைத் தொழிலாக மேற்கொள்ளத் தயாராக இருப்பவர்களுக்கும் முன்னுரிமை கொடுக்கப்படும் ;

(vi) விண்ணப்ப முடிவுத் திகதிக்கு நேர்முந்திய மூன்று ஆண்டுகளில் ஆகக் குறைந்தது இரண்டு ஆண்டுகளாக மேல் மாகாணத்துக்குள்ளாக விண்ணப்பதாரர் நிரந்தரமாக வசித்தமைக்கான சான்றாக பிரதேச செயலாளரிடமிருந்து பெறப்பட்ட பதிவுச் சான்றிதழொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

அத்துடன்

கல்வி மற்றும் ஏனைய தகைமைகளைக் கொண்டுள்ளோர் மேல் மாகாணத்துக்குள்ளாக வதிபவர்களாக இல்லாதிருந்து இப்பயிற்சி நெறியைப் பின்பற்ற விரும்புமிடத்து, அவர்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படும். எவ்வாறாயினும் தெரிவுகளைச் செய்யும்போது மேல் மாகாணத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மேல் மாகாணத்துக்குள்ளாக இருக்கும் பரீட்சார்த்திகளிடமிருந்து போதிய எண்ணிக்கையான விண்ணப்பங்கள் பெறப்படாவிட்டால் இவ்வாண்டில் மேல் மாகாணத்துக்கு வெளியேயிருந்தும் விண்ணப்பதாரர்களைத் தெரிவுசெய்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

**5. பயிற்சிநெறிகளுக்கான ஊக்குவிப்புப் படி.**- (i) பயிற்சிக் காலத்தின்போது ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் பயிற்சிக்குச் சமுகமளிக்கும் ஒவ்வொரு நாளுக்கும் இருநூற்று ஐம்பது ரூபா (ரூ. 250) ஊக்குவிப்புப் படியாக வழங்கப்படும். இப்படித் தொகை உணவுச் செலவுகளைச் சமாளிப்பதற்காகப் பயன்படுத்தப்பட வேண்டும் ;

(ii) சகல ஆண்/பெண் பயிற்சியாளர்களுக்கும் வதிவிட வசதிகள் இலவசமாக ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்.

**6. பயிற்சி நெறியில் பங்குபற்றுவதற்கு அவதானிக்கப்பட வேண்டிய நடைமுறைகள்.**- (i) பங்குபற்றுபவர் ஒவ்வொருவரும் 250 ரூபாவை வைப்புச் செய்ய வேண்டும்.

(ii) பயிற்சி முடிந்தபின்னர் ஆகக் குறைந்தது சிறிய அளவிலான விவசாயத்தில் ஈடுபடுவதற்கான அடிப்படை வசதிகள் இருக்க வேண்டும்.

(iii) பயிற்சி முடிந்த பின்னர் தொழில் கொடுப்பதற்கு மேல் மாகாண சபைக்கோ மத்திய அரசாங்கத்துக்கோ எவ்வித கடப்பாடும் இல்லை.

(iv) பயிற்சிக் காலத்தின்போது பயிற்சி நிறுவனத்தினால் விதிக்கப்படும் பொது விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இணங்கியொழுகுவதாக உடன்படும் எழுத்திலான கூற்றை அளித்தல் வேண்டும்.

(v) பயிற்சிக் காலத்தின்போது, புரியப்படும் ஏதேனும் ஒழுக்காற்று மீறுகைக்காகவும் விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் மீறியமைக்காகவும் பயிற்சியை இடைநிறுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பர்.

7. கீழே தரப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கிணங்க 8 1/2" x 12" அளவுள்ள தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம், "மாகாணக் கமத்தொழில் பணிப்பாளர், இல. 154, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை, கொழும்பு 07" என முகவரியிடப்பட்டு 2013.06.30 ஆந் திகதிக்கு அல்லது இதன் முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் "கமத்தொழில் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் - 2013/2014" என்று எழுதப்பட வேண்டும் :-

(i) ஆட்சேர்ப்புத் தொடர்பாக மாகாணக் கமத்தொழில் பணிப்பாளர் (மேல் மாகாணம்) செய்யும் முடிவு இறுதியானதாதல் வேண்டும்;

(ii) பூரணமற்ற அல்லது ஒழுங்கில் இராத விண்ணப்பம் எதுவும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். குறிப்பிட்ட எண்ணிக்கை கொண்ட தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பக்காரர்களே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர்;

(iii) பாடசாலையை விட்டு நீங்கியவர்கள் மாத்திரமே தெரிவுசெய்யப்படுவர் என்பதால் நேர்முகப் பரீட்சையில் பாடசாலையை விட்டு நீங்கிய சான்றிதழைக் காண்பிக்க வேண்டியது கட்டாயமானதாகும்;

(iv) விண்ணப்பதாரர் படித்த பாடசாலையிலிருந்து பெறப்பட்ட ஒரு நற்குணச் சான்றிதழும் வசிப்பிடத்தில் கீர்த்திவாய்ந்த ஒருவரிடமிருந்து பெற்ற நற்குணச் சான்றிதழுமாக இரு குணநலச் சான்றிதழ்களின் பிரதிகளும் கல்வி மற்றும் ஏனைய தகைமைகளின் சான்றிதழ்களின் பிரதிகளும் விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

(V) கல்விச் சான்றிதழ்களினதும் ஏனைய சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகளும் தேசிய அடையாள அட்டையும் நேர்முகத் தேர்வில் மாத்திரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ஆர். பீ. மஹிந்தபால,
மாகாணக் கமத்தொழில் பணிப்பாளர்,
மேல் மாகாணம்.

மாகாண கமத்தொழில் பணிப்பாளர் அலுவலகம் (மே. மா.),
இல. 154, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை,
கொழும்பு 07,
2013.03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மாகாண கமத்தொழில் திணைக்களம் - மேல் மாகாணம்**

*ஹோமாகம (ஆண்), வல்பிட்ட (பெண்) ஆகிய இடங்களிலுள்ள மாவட்டக் கமத்தொழிற் பயிற்சி நிலையங்களில் நடாத்தப்படவுள்ள உத்தேச ஓராண்டு கமத்தொழில் பயிற்சிநெறி - 2013/2014*

1. விண்ணப்பதாரரின் முழுப் பெயர் :-----.

2. முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.

3. (i) நிரந்தர முகவரி :-----.
   (ii) வதிவு மாவட்டம் :-----.

4. பால் :-----.

5. பிறந்த திகதி :-
   ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.

6. (i) தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
   (ii) தேசிய அடையாள அட்டை வழங்கிய திகதியும் நிறுவனமும் :-----.

7. தந்தையின் அல்லது பாதுகாவலரின் பெயர் :-----.

8. தந்தையின் அல்லது பாதுகாவலரின் முகவரி :-----.

9. கல்வித் தகைமை :-

(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை :-
(முதல் தடவை)
ஆண்டு :-----.

| சித்தியடைந்த பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

(ஆ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை :-
(இரண்டாவது தடவை)
ஆண்டு :-----.

| சித்தியடைந்த பாடங்கள் | தரம் |
|---|---|
| 1.<br>2.<br>3.<br>4.<br>5.<br>6.<br>7.<br>8. | |

(இ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தர)ப் பரீட்சை :-

ஆண்டு :-----.

| சித்தியடைந்த பாடங்கள் | தரம் |
|---|---|
| 1.<br>2.<br>3.<br>4. | |

10. ஏனைய தகைமைகள் (விசேட செயற்பாடுகள்) :-

(i) -----.
(ii) -----.
(iii) -----.

11. நீவிர் உயர் கல்வி நிறுவனத்தில் அல்லது தொழில்நுட்ப கல்லூரி நிறுவனத்தில் கற்கை நெறியொன்றிற்கு தெரிவுசெய்யப் பட்டுள்ளீரா ? அவ்வாறாயின் விபரங்களைத் தருக :-----.

மேலே என்னால் இதன்கண் கொடுத்துதவப்பட்ட விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையும் என இத்தால் நான் உறுதிமொழிகிறேன். நான் தெரிவு செய்யப்பட்ட பின்னர் இதன் கண்ணுள்ள விபரங்கள் எதுவும் பிழையானது எனக் காணப்பட்டால் பயிற்சிநிலை எவ்வித விசாரணையும் இல்லாமல் நீக்கம் செய்யப்பட்டுவிடும் என்பதை நான் நன்கறிவேன்.

.........................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

4-163

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி கிடைக்கப்பெறாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம்** :-

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்ளார்.***

***முக்கிய கவனிப்பு.*** *– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2013***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஏப்பிறல்** | .. | வெள்ளி | 05.04.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.03.2013 |
| | | வெள்ளி | 12.04.2013 | .. | நண்பகல் 12 | வியாழன் | 28.03.2013 |
| | | வெள்ளி | 19.04.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.04.2013 |
| | | வெள்ளி | 26.04.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.04.2013 |
| **மே** | .. | வெள்ளி | 03.05.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.04.2013 |
| | | வெள்ளி | 10.05.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.04.2013 |
| | | வெள்ளி | 17.05.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.05.2013 |
| | | வியாழன் | 23.05.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.05.2013 |
| | | வெள்ளி | 31.05.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.05.2013 |
| **யூன்** | .. | வெள்ளி | 07.06.2013 | .. | நண்பகல் 12 | வியாழன் | 23.05.2013 |
| | | வெள்ளி | 14.06.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.05.2013 |
| | | வெள்ளி | 21.06.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.06.2013 |
| | | வெள்ளி | 28.06.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.06.2013 |

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*